பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 19 வெள்ளிக்கிழமை 04.08.2023 கதிர் 266

### 13ன் கீழ் வழங்கப்பட்டுள்ள

# பொலிஸ் அதிகாரத்தை நீக்க கம்பன்பில தனிநபர் வரைவு

### நாடாளுமன்றத்தில் நேற்று கைளிப்பு

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தை நீக்கும் வகையில் 22ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்ட முன்மொழிவை பிவித்துரு ஹெலஉறுமயவின் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமானஉதயகம்மன்பில நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நேற்று கையளித்தார்.

தனிநபர்வரைபாக முன்வைக்கப்பட்டுள்ள குறித்த அரசமைப்புத் திருத்தத்தில் 13 ஆவதுதிருத்தச்சட்டத்தில்காணப்படுகின்ற பொலிஸ்அதிகாரங்கள் மற்றும் மாகாண பொலிஸ் சேவை ஆணைக்குழு ஆகிய வற்றை நீக்குவதற்கான முன்மொழிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

உதய கம்மன்பில மாகாணங்களுக்கு காணிபொலிஸ்அதிகாரம்வழங்கக்கூடாது என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார்.

இந்நிலையில் ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்கதலைமையிலானஅனைத்துக் கட்சி மாநாட்டில் மாகாணங்களுக்கான அதிகாரபகிர்வுசம்பந்தமானஉரையாடல்

☞2

## இது ரகசியம் அல்ல!

வவுனியாவில் அண்மையில் கணவன் மனைவி என இருவர் வெட்டியும் எரித்தும் கொலை செய்யப்பட்டனர். கொழும்பில் இருந்து பிறந்தநாள் விழாவிற்காக அவர்கள் வவுனியாவிற்கு வந்து தங்கியிருந்த வீட்டுக்குள் புகுந்தவர்கள் அவர்களைச் சகட்டு மேனிக்கு வெட்டினர். வீட்டில் இருந்த குஞ்சு குருமன் எல்லாவற்றையும் வெட்டிச் சரித்துவிட்டு கணவன் மனைவி மீதும் வீட்டிலும் டீசல் கலந்த பெற்றோலை ஊற்றித் தீவைத்துக் கொளுத்திவிட்டு வன்முறைக் கும்பல் தப்பியோடிவிட்டது.

திட்டமிட்டு வீட்டுக்குள் நுழைந்து பதற்றமில்லாமல் தரித்து நின்று இந்த வெறியாட்டத்தைஆடிய கும்பல் யார், என்ன, ஏது என்பது தொடர்பில் ஒரு வாரத்திற்கும் மேலாகப் பொலிஸாரால் எவரையும் கைது செய்ய முடியவில்லை. கொழும்பிலிருந்து தனிக் குழுக்கள் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டன. ஆனாலும் யாரையும் கைது செய்யவில்லை. இது குறித்துக் கண்டனங்களும், எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு நாள் திடீரென 5 பேரைக் கைது செய்திருப்பதாகப் பொலிஸார் அறிவித்தனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்தி இரண்டு நாட்கள் தம்மவசம் தடுத்து

☞2

## எரிவாயு விலை அதிகரிக்கும்

எரிவாயுவின் விலையில் இன்று திருத்தம் மேற்கொள்ளப்படுமெனலிட்ரோநிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலுமதெரிவித்ததாவது:

உலக சந்தையில் தற்போது 87 டொலருக்கும் அதிகமான விலையில் ஒரு மெற்றிக் தொன் எரிவாயு விற்பனை செய்யப்படுகிறது.

உலக சந்தையின் விலை மாற்றங்களுக்கேற்ப, இலங்கையில் எரிவாயுவின் விலை ஒவ்வொரு மாதமும் மாற்றியமைக்கப்படுகிறது. இந்நிலையிலேயே

☞2

## அதிகாரப் பகிர்வு சாத்தியமாக மாகாணத் தேர்தல் அவசியம்

### சுதந்திர மக்கள் சபை வலியுறுத்து

அதிகாரப் பகிர்வு நடைமுறை சாத்தியமாக வேண்டுமாக இருந்தால் மாகாணங்களுக்கானதேர்தல்நடைபெற வேண்டுமெனசுதந்திரமக்கள் சபை இந்தியத் தூதரிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயஆணையர் கோபால் பாக்லேவுக்கும் சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பு இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்தசந்திப்புதொடர்பாக சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்ததாவது:

இந்தியா தொடக்கத்திலிருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி வருகிறது அதே நேரத்தில் அதிகார பகிர்வு சம்பந்தமாகவும் அந்த நாடு கரிசனை கொண்டுள்ளது.

அதிகார பகிர்வு சம்பந்தமானவிடயம்எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் மாகாணங்களுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். இந்த விடயத்தை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும் தற்போதைய நிலையில் ஜனாதிபதிஆளுநர்கள்ஊடாக மாகாணங்களை நிர்வகித்துச் செல்வதற்கு

☞2

## நாகப்பட்டினம் - யாழ் இடையே எண்ணெய்க் குழாய்த் திட்டம்

### தொழில்நுட்பப் பேச்சு தொடங்கப்படவுள்ளது

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான எண்ணெய்க்குழாய்கட்டமைப்பை நாகப்பட்டினம் முதல் யாழ்ப்பாணம் வரை உருவாக்குவதற்கான தொழில்நுட்பப் பேச்சுதொடங்கப்படவுள்ளது.

தொழில்நுட்ப பேச்சு ஊடாகஇருநாடுகளுக்கிடைய ஸ்தாபிக்கப்படவுள்ள எண்ணெய்க் குழாய் கட்டமைப் பின்பௌதீகதிட்டம்தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த யோசனை திட்டத்திற்கமைய, தமிழகத்தின் நாகப்பட்டிணம் முதல் இலங்கையின்யாழ்ப்பாணம்வரையில்குறித்தகுழாய்கட்டமைப்பை உருவாக்குவதற்குத் தயாராவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில்ஜனாதிபதி இந்தியாவிற்குச்சென்றிருந்த சந்தர்ப்பத்தில், எரிசக்தியை குறைந்தவிலையில்பெற்றுக் கொள்ளும் எதிர்ப்பார்ப்புடன் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமையவே இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெற்றோலிய சந்தை சீனாவின் சினோபெக் மற்றும்அமெரிக்காவின் ஆர்.எம்.பார்க் நிறுவனங்களுக்காக திறந்து விடப்பட்டுள்ள நிலையில், அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம்நிறுவனமும் பிரவேசிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் டக்ளஸ் திடீரென்று ரகசியமாக இந்தியா பயணம்

(ந.லோகதயாளன்.)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா திடீரென்று இரகசியமாக இந்தியா சென்றுள்ளார். மீனவர்கள் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகவே அவர் இந்தியா சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றபோதும் அது குறித்த உத்தியோகபூர்வ தகவல்கள்எவையும்அமைச்சர் பக்கத்திருந்து வெளியிடப்படவில்லை.

இலங்கையின் கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்த கடந்த 1ஆம் திகதி இந்தியாவிற்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு இந்தியா பயணித்த அமைச்சர் டில்லியில் தங்கிநிற்கின்றபோதும் இந்திய ஊடகங்கள் எதற்கும் தகவல்கள்

☞2

## பொன்னாவெளியில் சீமெந்து ஆலை அமைப்பதை எதிர்த்துப் போராட்டம்





கிளிநொச்சி பொன்னாவெளியில் சீமெந்துத் தொழிற்சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்னாவெளி கிராமத்தில் டோக்கியோ நிறுவனத்தினால் விரைவில் சீமெந்துதொழிற்சாலைஒன்று நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டு வருகின்றது. இதற்காக அப் பகுதியில் ஒரு ஏக்கர் காணியை முதல் கட்டமாக பெற்று அங்கே ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அமைக்கத் திட்டமிடப்படும் சீமேந்து தொழிற்சாலை காரணமாக தமது வளம் சுரண்டப்படுவதுடன் எதிர்காலத்தில் அயல் கிராமங்களின் நிலங்களும் உவராக மாறும் நிலைமையுள்ளதால் சுவாசம் சார்ந்த பிரச்சனைகளும் ஏற்படும் எனவும் தெரிவித்தே கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு கிராமங்களைச் சேர்ந்த 200ற்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இவ்வாறு இடம்பெற்ற போராட்டமானது பொன்னாவெளி பொதுநோக்கு மண்டபத்திலிருந்து ஆரம்பித்து சீமேந்து ஆலைக்காக ரேக்கியோ நிறுவனம் ஆய்வுப் பணியை முன்னெடுத்துவரும் இடம் வரை இடம்பெற்றது..

ஆய்வு பணிகள் மேற்கொள்ளுகின்ற இடத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணித்தியாலம் வரை இந்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் மத தலைவர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

## தீவக அதிகார சபைச் சட்டமூலம் அமைச்சரவையின் அனுமதிக்கு

### சமர்ப்பிப்பு என்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.

(ந.லோகதயாளன்.)

தீவகம் முழுவதையும் அதிகார சபைக்குள் கொண்டு வந்து அனைத்து நிர்வாகத்தையும் கொழும்பின் கீழ் கொண்டு வருவதற்குரிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகநாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

த.தே.ம.முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ம் திருத்தச்சட்டத்தை அமுல்ப்படுத்தல் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி செயலகத்திலிலுந்து மீண்டுமொருமுறை தமிழ்த் தேசிய மக்கள்

☞2

## மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது தற்போது பொருத்தமற்றது

### அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி கருத்து

தற்போதைய அரசியல் நிலையில் மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்குவது பொருத்தமற்றது என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ்அதிகாரம்வழங்குவதுதொடர்பில்எமக்குதமிழ் மக்களுடன்எவ்விதமானபிரச்சினையும் இல்லை. ஆனால் தற்போதையநிலையில்பொலிசார் அரசியல் மயமாகியுள்ளதாக பொதுமக்களிடம் பெரும் குற்றச்சாட்டு உண்டு.

அவ்வாறானதொருநிலையில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது பொருத்தமற்றதாகும். ஏனென்றால் ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பதுமுதலமைச்சர் இருப்பார்கள். அந்த முதலமைச்சர்களே பொலிசாரை நிர்வாகம் செய்யப் போகிறார்கள்.

தற்போது ஒரே பொலிஸ் கட்டமைப்பு காணப்படுகின்றபேதே குற்றச்சாட்டுகள் இருக்கின்ற நிலையில் 9 மாகாணங்களும்பொலிஸ்அதிகாரத்தை கையாளும் போது நாட்டின் நிலை என்னவாகும் என்ற கேள்வி இருக்கின்றது.

அதுவொரு அச்சமான நிலையை ஏற்படுத்துகின்றது. ஆகவே அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதித்து தீர்மானம் ஒன்று எடுப்பதுபொருத்தமானதாகும் - என்றார்.

## விரிவுரையாளர்கள் 600 பேர் நாட்டைவிட்டு வெளியேற்றம்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 600 பேர் கடந்த ஆறு மாதங்களில் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர் என்று இலங்கை பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களின்சங்கம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரை யாளர் சங்கங்களின் தலைவர் பேராசிரியர் பரண ஜயவர்த்தன இது தொடர்பில் தெரிவித்ததாவது:

கடந்த ஆறு மாதங்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தங்களது பணிகளைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளது..

இதனால் பல்கலைக்கழகங்களில் பல்வேறு பீடங்களில் பற்றாக்குறை காணப்படுகின்றது சில பல்கலைக்கழகங்களில் பீடங்களை முறையாக முன்னெடுத்து செல்வதற்குப் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் பல்கலைக்கழகங்களில் 12,000க்கும் அதிகமான வெற்றிடங்கள்காணப்படுகின்றன அதேநேரம் 6 ஆயிரம் வரையிலான விரிவுரையாளர்களே உள்ளனர்.

இவ்வாறான நிலையில் பல்கலைக்கழக கல்வியின் எதிர்காலம் ஆபத்துக்குள்ளாகியுள்ளது இது தொடர்பில் புதிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவேண்டும் என்பது நமது கோரிக்கையாக உள்ளது - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

வைத்து விசாரிப்பதற்கான அனுமதியையும் பெற்றனர்.

இந்தக் கொலைகளின் பின்னணியில்கடத்திக்கப்பம் வாங்கும்கட்டப்பஞ்சாயத்து, ஹெரோயின் போன்ற பல் வேறு குற்றச்செயல்களின் பினன்னி இருப்பதாகக் கதைகள் பல உலாவின. உயிரிழந்த சுந்தன் என்பவர் முன்னர் தோணிக்கல்லில் புகழ்பெற்ற ரௌடி என்று கூறப்படுகின்றது. பணக் கொடுக்கல் வாங்கல்களில் பணம் கொடுத்தவர்களுக் கான கூலிப் படையாகச் செயற்பட்டவர்கள் என்றும் கூறப்படுகின்றது. இதனா லேயே அவரை வெட்டிக் கொன்றார்கள் என்றும் இந்தத் தாக்குதலில் இடை யில்அகப்பட்ட அவரது மனை வியும் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவரது இறுதிக் கிரியையில் ஈபிடிபி நாடாளுமன்ற உறுப்பி னர் திலீபன் கலந்துகொண் டமையும் கொல்லப்பட்டவர் களுக்காகக் குரல் எழுப் பியமையும் இந்த விவகா ரத்தை மேலும் விரிவான, ஆழமானதிசைக்கு இழுத்துச் சென்றது. இதற்கிடயில் கொல்லப்பட்ட பெண்ணின் அண்ணனான சுரேஸ் என்பவர் முன்னாள் கூட்ட மைப்பு பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவர்களுக்கு நெருக்கமானவர் என்ற கதையும் உலாவியது. வைத் தியசாலையில் சிகிச்சை பெற்ற அவரை குறித்த கட்சித் தலைவர் சில தடவைகள் நேரில் சென்று நலம் விசாரித் தார் என்றும் தெரிவிக் கப்பட்டது.

இவையெல்லாம் போக பொலிஸார் இப்போது திடீரென ஒரு புதுக் கதை ஒன்றை அவிழ்த்துவிட்டிருக்கிறார்கள். இந்தக் கொலைக்கு காதல் விவகாரமே காரணம் என்றும் கூலிப் படைகள் மூலம் கண வன் மனைவி இருவரும் கொல்லப்பட்டுள்ளனர் என் றும் அவர்கள் கூறியுள்ளனர். அதாவது தேடிக் கொல்லப்பட்ட சுகந்தன் என்பவருக்கு அவ ரது மனைவியான பாத்திமா விற்குப் புறம்பாக - அவரைத் தாண்டிய - காதல் ஒன்று இருந்ததாகவும், கிராமம மட்ட அரச பணியாளர் ஒருவ ருடன் இருந்த அந்தக் காதல் தொடர்பே இந்தக் கொலைக்குக் காரணம் என்றும் பொலிஸார் இப்போது கதை கூறியுள்ளனர். அந்தக் கிராம மட்ட பணியாளரைக் காதலித்த மற்றொருவர் கூலிப் படையினரை வைத்து சுகந்தனைக் கொன்றார்கள் என்றும். அதற்காக வீட் டுக்குச் சென்ற சமயம் கொலை காரர்களைக் கண்டதும் அச்சமடைந்த சுகந்தனின் மனைவியான பாத்திமா கூச்சலிட்டுக் கத்தியதால் அவரை அமைதிப்படுத்த வெட்டிக் கொன்றனர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

கொலையாளிகள் பயன்ப டுத்திய மோட்டார் சைக்கிள் கள் வாள்கள் என்பன கண் டெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். கொலை நடந்து ஒரு வாரம் கழித்து சந்தேகநபர்களைக் கைது செய்த பொலிஸார், இவ்வளவு விரிவாகக் கார ணங்களை கண்டறிந்து சந்தேகநபர்களைக் கைது செய்த பொலிஸார், பின்ன ணிக் கதைகைளை அக்கு வேறு ஆணி வேறாக கண்டறிந்துள்ள பொலிஸார், பின்னர் ஏன் அவர்களை விசாரணை நடத்துவதற்காக மீண்டும் ஏன் அவர்களை இரண்டு நாட்கள் தமது காவலில் எடுத்தனர் என்பதும் தெரியவரவில்லை.

கொலைகளுக்கான பின் னணி எதுவாக இருந்தாலும் உண்மைக் கொலையாளிகள் கண்டறியப்பட்டு நீதி நிலை நாட்டப்படவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தீவக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணிக்கு அழைப்பு விடுகப்பட்டுள்ளது.

சர்வதேசத்திற்கு தமிழ் மக்களிற்கு தீர்வு வழங்கப் போவதாக கூறி அரசியல மைப்பிலுள்ள 13 ம் திருத் தச்சட்டத்தை அமுலாக்க பேச்சு வார்த்தை நடாத்துவதானது ஈழத்தமிழகளை ரணில் விக்கிரமசிங்க கணக்கெ டுக்கத் தயாரில்லை என் பதைக் காட்டுகின்றது.. இதை தெரிந்துகொண்டு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமிழ்த்தரப்புகளின் பேச்சுதலுக்கு வாய்ப்புக்ளை இல்லாமலாக்கி சிங்கள மக்கள் ஏற்றுகொள்ளாத ரணில் விக்கிரமசிங்காவிற்கு முண்டு கொடுப்பதாகவே அமைகின்றது.

13 ம் திருத்தத்தை அமுல்படுத்துவதாக கூறி மக்களை ஏமாற்றும் அதே தருணம் இந்த அரசு தீவகம் முழுவதையும் அதிகார சபைக்குள் கெOண்டுவந்து அனைத்து நிர்வாகத்தையும் கொழும்பின் கீழ் கொண்டு வருவதற்குரிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.

தீவகத்தின் அதிகாரகட் டைமைப்பானது மகாவலி அபிவித்திரை விட மிகமோச மாகதமிழரின்தலைவிதியை மாற்றியமைக்கக் கூடிய வகையில் கொழும்பால் மட் டும் நிர்வகிக்கக்கூடியவா றானதாக உத்தேச சட்டம் காணப்படுகின்றது.

இது ரணில் விக்கிர மசிங்காவிற்கு முண்டு கொடுக்கும் தரப்பிற்கு இவ் விடயம் முற்றாக தெரிந்த விடயம். மக்களின் வாழ்க் கையை நடாத்த முடியாத வளவிற்கு மக்கள் அங்கிருந்து இடம்பெயரும் நிலையே உள்ளது. இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சுற்றுலா போன்ற விடயங்களை காட்டி சிங்கள மயமாக்லுக்காகவே பயன்படுத்தப்படுகினது.

தீவகம் இந்திய இலங் கைக்கு கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடமாக உள்ளது. எனவே அது பேரம்பேசுதல்களுக்காக சிங்களத் தரப்பிடம் இருக்க வேண்டுமென்பதற்காகவே இவ் நடவடிக்கை மேற்கொள் ளப்படுகின்றது.

இந்திய ரோலர்கள் எமது கடற்தொழிலாளர்களின் சொத் துக்களை அழித்து தொழில் செய்வதற்கு அவமதித்தலைப் போலவே தீவக கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

சட்டபூர்வமாக ஒன்று மில்லாத 13 ம் திருத்தச்சட் டத்திற்குள் பேச்சுவார்த் தையை முடக்கி அரசாங் கத்திற்கு வெள்ளையடித்து சிங்களமயமாக்கலுக்கு உதவுகின்றனர்.

வட கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர்களின் சுயநிர்ணயத்தை பாதிக்கும் எவ்வித அபிவிருத்திக்கும் அனுமதிக்கப்போவதில்லை. அதற்கு துணைபோகும் தரப்பினர்களுக்கெதிராக மக்களை அணிதிரட்டுவோம்.

மலையக மக்களின் வருகையை 200 நினைவு கூரும் சந்தப்பத்தில் இந் நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட மக்களின் பொருளா தாரத்தை அழிக்கும் நோக் கில் கடன் சீரமைப்பு அமைந் துள்ளது. சகல விதத்திலும் எடுத்து நோக்கினால் இவ் ஆட்சி.மலையக மற்றும் தமிழ் , முஸ்லிம் மக்களுக் கான நிதிரையும் வழங்கப் போவதில்லை என்பதுடன் சிங்களவருக்கும் எவ்வித தீர்வையும் வழங்கப்ப போவதில்லை.

வட கிழக்கில் சமஷ் டிக்கான ஆணையைப் பெற்றவர்கள் 13 ம் திருத்தச் சட்டத்திற்குள் முடக்குவதற்கு செயற்படுகின்றார்கள். இத் துடன் மனோ கணேசன் 13 ம் திருத்தச்சட்டம் பற் றியும் இந்தியாவின் நிலைப் பாடும் பற்றி கூறிய கருத் தானது மலையக அரசியலை மையமாகக் கொண்டு செயற் படும் மனோ கணேசனே சனுக்கு வடகிழக்கு அரசியல் தன்மை புரியாமலுள விதமே காரணமாகும்.

இத்துடன் ஈழத்தமிழர் களின் உரிமைப் போராட்டத் தில் மலையக மக்களின் பங்களிப்பை நினைவுபடுது கின்றோம். 1983 ம் ஆண்டு இடம்பெயர்ந்து வடக்கிற்கு வந்த போது எமது உரிமைப் போராட்டத்தில் இணைந்து பயணித்தனர். அவர்களின் பங்களிப்பு போராட்டத்தில் உச்சமாக இருந்தது.

இதேவேளை எமது கட்சியினுடைய முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ராஜினியுடைய வீட்டினுள் புகுந்த பொலிசார் அவருக்கு அச்சுறுத்தும் விதமா கவும் பாதுகாப்பை கேள்விக்குட் படுத்தும் விதமாகும் நடந்துள் ளனர். இது சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடளிக் கப்பட்டுள்ளது.

தற்போது வடகிழக்கிற்கு இடமமாற்றத்தில் வரும் பொலிசார் பொரும்பாலும் தண்டணை முறை இடமாற் றத்தினூடாகவே பணிக் கமர்த்தப்படுகின்றனர். அவர்கள் நீதியின்பால் செயற்படாமல் மக்களின் காசை கொள்ளையடித்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கலாச்சாரத்தையே தொடரந் துகொண் டிருக்கின்றனர். எனத் தெரிவித்தார்.

## எரிவாயு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிவாயுவிலை திருத்தம் செய்யப்படவுள்ளது என்றார்.

இதன்படி இன்று முதல் எரிவாயு விலை அதிகரிக் கப்படும் என்று தெரிகின்றது.

## அதிகாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகளை எடுத்து வரு கிறார். இந்த நிலைமை மாற்றம் அடைந்து அதிகாரப் பகிர்வுக் கோட்பாடு நடை முறையில் வெற்றி பெறுவ தற்கு தேர்தல் அவசியம் என்பதை நாம் வலியுறுத் தினோம்

அதே நேரம் எதிர்கா லத்தில் இந்தியாவினுடைய உதவிகளை பெற்றுக் கொள் வதற்கு அதன் நீண்டகால கோரிக்கையான 13ஐ முழுமையாக அமுலாக்க வேண்டும் என்பதும் முக்கிய விடயமாகிறது - என்றார்.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்படவில்லை.

இதேநேரம் இந்தியா சென்ற அமைச்சர் இந்தி யாவின் ஓர் இணை அமைச் சரைச் சந்தித்தோடு இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை வருகை தந்த ஓர் முதலீட்டாளரைச் சந் தித்து நீண்ட நேரம் கலந்து ரையாடினார் எனவும் தெரிய வருகின்றது.

இதேநேரம் அமைச்ச ரின் பயணம் தொடர்பில் இலங்கைத் தரப்பிலோ அல்லது இந்தியத் தரப்பில் இருந்தோ எந்தவிதமான உத்தியோகபூர்வ தகவலும் வெளியிடப்படவில்லை.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலை யில் கம்மன்பிலவால் இந்த வரைவு முன் மொழியப்பட் டுள்ளது. இதற்கிடையில், கடந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் முடிந்த நிலையில் மீண்டும் ஓகஸ்ட் 15 அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டு வதற்கான அழைப்பு கட்சித் தலைவர்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

# பெண் எம்.பிக்களின் நியூஸிலாந்து பயணம் அரச செலவில் இல்லை

## நாடாளுமன்ற செயலாளர் நாயகம் விளக்கம்




இலங்கை பெண் நாடாளுமன்ற உறுப் பினர்களின் ஒன்றியத்தின் நியூசிலாந்து ஆய்வுப் பயணத்துக்கு அரச நிதி பயன்படுத்தப் படவில்லையென நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

இந்த ஆய்வுப் பயணம் இரண்டரை வருடங்களுக்கு மேலாக அரச நிதியைப் பயன்படுத்தாது அபிவிருத்திப் பங்காளர்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வு என அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக இலங்கை பெண் நாடாளுமன்ற உறுப் பினர்கள் ஒன்றியம் இந்நாட் டுப் பெண்களின் சமூகப் பொருளாதார மற்றும் அரசி யல் நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதில் பெரும் பங்காற்றி வருவதாகவும், இந்தப் பணி களை மேலும் வினைத் திறனான முறையில் முன்னெ டுப்பதற்கு பொதுநலவாய நாடு களில் அங்கம் வகிக்கின்ற அபிவிருத்தியடைந்த நாடுகளின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வது பயனுள் ளதாக இருக்கும் எனவும் ரோஹ னதீர மேலும் தெரிவித்தார்.

இலங்கை பெண் நாடாளுமன்ற உறுப்பி னர்களின் ஒன்றியம் பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும், உறுப்பினர்கள் அனைவரும் பொதுவான இலக்குகளுக்காக ஒன்றுபட்டு அதன் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே தலைமையில் செயற்பட்டு வருகின்றனர் என்று செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# மல்லாவிக் குளத்தில் மீன்கள் இறந்து மிதப்பு







மல்லாவி குளத்தில் இலட்சக் கணக்கான மீன் கள் திடீரென இறந்து கரையொ துங்கியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத் திற்குற்ப்பட்ட மல்லாவி குளத் தில் விவசாயத்திற்கு நீர் விநியோகிக்கும் கால்வாயில் இலட்சக்கணக்கான மீன் இறந்து காணப்படுகின்றன.

தற்போது நிலவுகின்ற கடுமையான வெயில் காரண மாக குறித்த குளத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைந் துள்ள நிலையில் மீன் இறந் திருக்கலாம் என பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மீன் குஞ்சுகள் சில மாதங்களுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்டு குளத்தில் விடப்பட்டவை.(113)

# நிர்மாணத்துறைக்கு புத்துயிரளிப்பதே ஜனாதிபதி ரணிலின் உடனடி நோக்கம்

## அவரது ஆலோசகர் சாகல தெரிவிப்பு

இலங்கையின் நிர்மாணத்துறைக்கு புத்துயிரளித்து தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்குவதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமாகும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

'நிர்மாணக் கைத்தொழில் புத்துயிர் பெறுவதற்கான செயற்குழு' நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கூடிய போது சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த காலங்க ளில் காணப்பட்ட பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து நிர்மாணத்துறையில் ஏற்பட்ட பிரச் சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி இந்தத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

நிர்மாணத்துறையினருக்கு அரசாங்கம் வழங்க வேண்டிய மூன்று மாத நிலுவைத்தொகையை இந்த ஓகஸ்ட் மாதத்திற்குள் வழங்கக் கூடியதாக இருக்கும் என குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

# அஸ்வெசும நலன்புரி திட்டத்தால் சமுர்த்தி நிறுத்தப்படவே மாட்டாது

## இப்படி உறுதியளிக்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர்

'அஸ்வெசும' சமூக நலன் புரித் திட்டமானது சமுர்த்தி வேலைத் திட்டத்தையோ அல்லது சமுர்த்தி வங்கிகளையோ இல்லாதொழிக்க முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் அல்ல என்றும் சமூக நலன்புரி நன் மைகள் தேவைப்படுபவர்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதை இலக்காகக் கொண்ட முறையான வேலைத்திட்டமாகும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தற்போது சமுர்த்திப் கொடுப்பனவு பெற்றுவரும் 393,094 குடும்பங்களுக்கு மேன்முறையீடுகள் மற்றும் ஆட் சேபனைகள் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை தொடர்ந்து சமுர்த் திக்கொடுப்பனவை வழங்குவதற்கு ஜனா திபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்பு ரையின் பேரில் தீர்மானிக்கப்பட்டுள்ள தாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப் பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர்

இதுவரை காலமும் சமூக நலன் புரி வேலைத்திட்டத்தில் நிலவிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து அடுத்த வருடத்திற்கான புதிய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கு எதிர்பாரக்கின்றோம்.

அத்துடன், கிடைக்கப்பெற்ற மேன் முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பிலான பூர்வாங்கப் பணிகள் பிரதேச செயலாளர்களால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றோம்.

அஸ்வெசும சமூக நலன்புரித் திட்டத்தில் 20 இலட்சம் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கத் திட்ட மிட்டுள்ளதாகவும், அதற்காக விண் ணப்பங்கள் கோரப்பட்டு, அவை பரீட்சிக் கப்பட்டு அதில் தற்போது 1,792,265 விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளன.

இப்பெயர் பட்டியல் பகிரங்கப்ப டுத்தப்பட்ட பின்னர் 10 இலட்சத்துக்கும் அதிகமான மேன்முறையீடுகளும், சுமார் 120,000 ஆட்சேபனைகளும் கிடைத்துள்ளன. தற்போது அவை தொடர்பான பரிசீலனைகள் இடம் பெற்று வருவதுடன், உரிய மேன்முறை யீடுகளையும், ஆட்சேபனைகளையும் மறுபரிசீலனை செய்த பின்னர், உரிய இலக்கை அடைய முடியும்.

தற்போது சமுர்த்தி உதவித்தொகை பெறும் சுமார் 1,280,000 குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரி உதவிகளுக்காக விண்ணப்பித்துள்ளன. இதில் 887,653 குடும்பங்கள் இத்திட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய, நிவாரணம் பெற குறித்த தகுதிகளைப் பூர்த்தி செய்யாத 393,094 குடும்பங்களின் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேப னைகள் மீதான விசாரணைகள் முடியும் வரை வழமைபோன்று அவர்கள் பெற்று வந்த சமுர்த்திக் கொடுப்பனவை தொடர்ந்தும் வழங்குவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

தற்போது, முதியோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்பட்டது போல் வழங்கப்படும் என்றும் அதன்படி, முதியோர் உதவித்தொகை தபால் நிலையங்கள் மூலமாகவும், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி உதவித்தொகை பிரதேச செயலகங்கள் ஊடாகவும் வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது வழிபாட்டுத் தலங்கள், முதியோர் இல்லங்கள், மற்றும் அங்கவீனர் நிலையங்களில் உள்ள 11,660 பேருக்கு அவர்கள் பெற்று வந்த சமூக நலன்புரிக் கொடுப்பனவுகளை தொடர்ந்தும் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு புதிய முறைமையின் கீழ் அஸ்வெசும சமூக நலன்புரி கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் முன் வைக்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு இந்த அஸ்வெசும வேலைத்திட்டத்தின் ஊடாக எவரும் கைவிடப்படாத வகையிலேயே இந்நடவ டிக்கைகள் செயற்படுத்தப்படுவதாகவும், தற்போது வழங்கப்பட்டுள்ள வங்கிக் கணக்குகள் தொடர்பில் உறுதிப்படுத்தல் பணிகள் நிறைவடைந்ததுடன் அஸ்வெசும கொடுப்பனவுகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

அஸ்வெசும சமூக நலன்புரித் திட்ட உதவிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட் டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தற்போது பிரதேச செயலாளர்களின் தலைமையில் பரிசீல னைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகள் நிறைவடைந்தவு டன் 2024ஆம் ஆண்டுக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளும் பணியை ஆரம்பிக்க தீர்மானிக் கப்பட்டுள்ளது. அஸ்வெசும என்பது சமுர்த்தி வேலைத்திட்டத்தையோ அல்லது சமுர்த்தி வங்கிகளையோ இல்லாதொழிக்க முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் அல்ல என்றும், சமுர்த்தி வங்கிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், எதிர்காலத்தில் மத்திய வங்கியின் ஊடாக ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டத்தை தயாரிக்க சமுர்த்தித் திணைக்களம் எதிர்பார்த்துள்ளது - என்றார்.

# ஈரானுக்கு பறக்கிறார் அயலுறவு அமைச்சர்



அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி

மூன்று நாள் உத்தியோகப்பூர்வ பயணமாக நாளை ஈரான் இஸ்லாமிய குடியரசுக் குச் செய்யவுள்ளார். இந்தப் பயணத் தின்போது, வெளிவிவகார அமைச்சர் ஈரானிய ஜனாதிபதி செயிட் இப்ராஹிம் ரைசியை சந்திக்கவுள்ளதுடன், ஈரான் அயலுறவுத்துறை அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் அந்நாட்டின் உயர் அரச அதி காரிகளுடனும் சந்திப்புகளை நடத்த வுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்படுத்தல் மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

ஈரானின் அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் நிறுவனத்தில் அயலுறவுத்துறை அமைச்சர் விசேட உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேசத்தின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணிலே வென்றார்

## பிரசன்ன ரணதுங்க பெருமிதம்



போராளிகளாலும் சதிகாரர்களாலும் அழிக்கப்பட்ட நாட்டை மீட்டு, நாட்டின் எதிர்காலத்தை ஜனாதிபதி ரணில் உறுதிப்படுத்துகிறார் என நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தற்போதைய ஜனாதிபதி சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றுள்ளார் எனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், உலகின் பலம் வாய்ந்த 4 நாடுகளின் தலைவர்கள் 10 நாள்களில் அவரை சந்தித்துப் பேசியதன் மூலம் இது புலனாகிறது என்றும் கூறியுள்ளார்.

கம்பஹா உடுகம்பலாவில் உள்ள அவரது அலுவலகத்தில் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

நமது பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு இரண்டு முக்கிய காரணங்களாக இருப்பது கொவிட் மற்றும் போராட்டமாகும்.

எமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சியின் ஆதரவு தேவை. ஆனால், நமது நாட்டில் எதிர்க்கட்சிகள் பாரம்பரிய அரசியலை செய்து வருகின்றன.

இந்த இக்கட்டான தருணத்திலும் அரசாங்கத்தை ஆதரித்து, மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள். நாட்டைக் காப்பாற்றும் பயணத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை.

நமது எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் கூச்சல் மட்டுமே போடுகிறார். அவர் விரிவுரை வழங்குவதில் வல்லவர். தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மிகவும் பொறாமையுடன் பார்க்கின்றார்.

ஜனாதிபதி நாட்டுக்காகக் கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கும் வேளையில் எதிர்க்கட்சிகள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு கோஷமிடுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது மாத்திரமே நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையுமா என எதிர்க்கட்சிகளிடம் கேள்வி எழுப்புகின்றோம்.

எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சி என்ற ஒற்றைக் கருத்துக்கு வர முடியாது. ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் கல்வியறிவு அற்றவராக இருப்பது ஓர் அரசாங்கத்துக்கு பாதகம். அநுரகுமார பற்றியும் பேச ஒன்றுமில்லை. அவருக்கு பேச்சு மட்டுமே. வேலை இல்லை. அதனால்தான் அந்த மக்களை பற்றி பேசுவது நேரத்தை வீணடிப்பதாகும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள போராட்டம் காரணமாக வெளிநாட்டு கப்பல்கள் திரும்பிச் சென்றதுடன் விமான நிலைய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

ஆனால், இப்போது எல்லாம் இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது. நாட்டின் வளர்ச்சிக்காக அரசு செயற்பட்டு வருகிறது.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் உள்ளூர் மற்றும் சர்வதேச ஆதரவு தேவை. போராளிகளாலும் சதிகாரர்களாலும் அழிக்கப்பட்ட நாட்டை வழமைக்கு கொண்டுவந்து நாட்டின் எதிர்காலத்தை உறுதி செய்கிறார் ஜனாதிபதி ரணில்.

ஜனாதிபதி சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றுள்ளார். 10 நாள்களில், உலகின் சக்திவாய்ந்த 4 நாடுகளின் தலைவர்கள் அவரை சந்தித்தனர். சமீபகால வரலாற்றில் எந்த அரச தலைவருக்கும் இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்ததில்லை.

மேலும், சர்வதேச சமூகத்தில் இலங்கை மீது அதிக நம்பிக்கை உள்ளது. எமது நாடு சர்வதேச சமூகத்திடம் இருந்து ஓரங்கட்டப்பட்ட நாடாகும்.

கடந்த காலங்களில் சில நாடுகள் எமது நாட்டுக்கு விஜயம் செய்ய வேண்டாம் என தமது பிரஜைகளுக்கு அறிவித்திருந்தன. இப்போது அப்படியொரு நிலை இல்லை.

மீண்டும் நம் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியுள்ளனர். சுற்றுலாப் பயணிகள் வரும்போது, சுற்றுலாத்துறையையே வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் கைகள் வளமாகின்றன. நாட்டுக்கு சில டொலர்கள் கிடைக்கின்றன.

இப்போது கடந்த காலத்தை பார்ப்பதில் அர்த்தமில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மோசமானவர் அல்லர். அவர் செய்த செயல்கள் நல்லனவா, கெட்டதனவா என்பது எதிர் கால சந்ததியினரால் தீர்மானிக்கப்படும்.

அடுத்த வருடம் எப்படியும் தேர்தல் வருடமே. அதனால்தான் ஜனாதிபதி வேட்பாளர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்பவர்கள் நிறைந்திருக்கிறார்கள்.

சஜித் பிரேமதாச, அநுர குமார, எம்மை விட்டுப் பிரிந்து சென்றவர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள் ஜனாதிபதி வேட்பாளர் வரிசையில் வருகின்றனர்.

ஆனால், இந்த நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட மொட்டுக் கட்சியான நாங்கள் இன்னும் அமைதியாக இருக்கிறோம்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நேரத்தில் நாங்கள் எங்கள் துருப்புச் சீட்டை வைப்போம். அது வரை மற்றவர்களின் விளையாட்டுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜனாதிபதித் தேர்தல்கள், பொதுத் தேர்தல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் என எதுவாக இருந்தாலும், மக்கள் வாக்குகளால் அதிக வெற்றி பெறுவது மொட்டுதான். - என்றார். (05)

# குவைத்தில் தூக்கிலிடப்பட்ட இலங்கையரின் பிரேதசோதனையில் 3 மனைவியர் பிரசன்னம்!

போதைப்பொருள் குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டு குவைத்தில் தூக்கிலிடப்பட்ட இலங்கையர் ஒருவரின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்ய புதன்கிழமை நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, சடலம் தொடர்பில் விசாரணை தொடங்கியபோது, இறந்தவரின் மனைவிகள் என்று கூறி மூன்று பெண்கள் அங்கு பிரசன்னமாகினர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. உயிரிழந்தவர் அநுராத புரத்தைச் சேர்ந்த 46 வயதுடையவராவார். இவருக்கு கடந்த 27 ஆம் திகதி சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில், சடலம் தொடர்பில் விசாரணை தொடங்கியபோது, இறந்தவரின் மனைவிகள் என்று கூறி மூன்று பெண்கள் அங்கு பிரசன்னமாகியுள்ளனர். இவர்களில் ஒருவர் ஓமானில் தொழில் புரிபவரெனத் தெரிய வருகிறது. இந்தப் பெண் தூக்கிலிடப்பட்ட நபரை திருமணம் செய்து 17 வருடங்கள் ஆவதாகவும் இரண்டு குழந்தைகளுக்கு தாய் எனவும் தெரியவந்துள்ளது. இருப்பினும், அங்கு நிலவும் கடும் வெப்பம் காரணமாக குறித்த சடலத்தின் பிரேத பரிசோதனை பணிகள் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றன. (05)

# பாலியல் துஷ்பிரயோக முயற்சி மாணவன் வைத்தியசாலையில்!

## ஆசிரியர் தலை மறைவு

பாடசாலை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் ஆசிரியர் தலைமறைவாகியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி உடற்கல்வி ஆசிரியரால் விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவன் துஷ்பிரயோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என அதிபரிடம் முறையிடப்பட்டிருந்தது.

சம்பவம் இடம்பெற்று மறுநாள் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் அதிபரிடம் முறையிட்டுள்ளதுடன் இதுவரை இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மூடிமறைப்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனையடுத்து, நிந்தவூர் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் தரம் 9 இல் கல்வி கற்கின்ற தனது மகனிடம் வாக்குமூலம் ஒன்றை இரு தடவை பெற்று சென்றுள்ளதுடன், மகனை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சி செய்ததாக கூறப்படும் சந்தேக நபரான ஆசிரியர் தொடர்ந்தும் தலைமறைவாகி உள்ளதாக தாயார் குறிப்பிட்டார்.

இந்நிலையில், பாலியல் துஷ்பிரயோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் தனது மகன் புதன்கிழமை மாலை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸார் வாக்குமூலங்களை பெற்றுச்சென்றுள்ளார் எனத் தாய் மேலும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் எந்த தரப்பினரும் எமக்கு உதவவில்லை என கண்ணீர் மல்க பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் ஊடகங்களிடம் தெரிவித்தார். (05)

# அனுமதியின்றி கொண்டு சென்ற 2,000 கடலட்டை குஞ்சுகள் மீட்பு

## மன்னாரில் சம்பவம்

மன்னாரில் இருந்து அனுமதிப்பத்திரம் இன்றி குஞ்சு கடலட்டைகளை கொண்டு சென்ற இருவர் வியாழக்கிழமை காலை மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனை சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குஞ்சு கடலட்டைகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சோதனை சாவடியில் வைத்து இராணுவத்தினரால் அவர்கள் பயணித்த வாகனம் சோதனைக்குட்படுத்தப்பட்ட போது கடலட்டைகள் அனுமதிப்பத்திரம் இன்றி கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட பல்லவராயன் கட்டுப்பகுதியைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட கடலட்டைகளும் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)



# தேசியகீதத்தை தவறாக பாடிய உமாரா மன்னிப்புக் கோரினார்

எல்.பி.எல். 2023 இன் ஆரம்ப நிகழ்வில் தேசிய கீதத்தை தவறாக பாடினார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளான பாடகி உமாரா சிங்கவன்ஸ அதற்காக மன்னிப்புக் கோரியுள்ளார்.

எல்.பி.எல். போட்டியின் ஆரம்ப நிகழ்வில் தான் தேசிய கீதத்தை பாடியவிதம் எவரையாவது புண்படுத்தியிருந்தால் அதற்காக மன்னிப்புக் கோருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தனது முகநூலில் இதனைப் பதிவு செய்துள்ள அவர், தேசிய கீதத்தை இசைத்தவேளை வார்த்தை பிரயோகங்களில் தவறுகள் காணப்பட்டதை தானும் உணர்ந்ததாக தெரிவித்துள்ளார்.

நான் வார்த்தைகளை மாற்ற முயலவில்லை தேசிய கீதத்தைத் திரிவுபடுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரஜை என்ற வகையில் நான் எப்போதும் தேசியக்கொடியை பெருமையுடன் கொண்டுசென்றுள்ளேன். நாட்டின் பெருமையை உயர்த்த முயன்றுள்ளேன். பாடல்கள் மூலம் என்னால் முடிந்தவரை நாட்டுக்கு பங்களிப்பு செய்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# மேல்மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பாயிஸ் காலமானார்!



மேல்மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அரசியல் பீட உறுப்பினருமான பாயிஸ் காலமானார். (05)





# யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்புரை சத்திரசிகிச்சை இலவசம்

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான சத்திரசிகிச்சையை யாழ் போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சைகள் கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவன் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சத்திரசிகிச்சை திட்டம் ஐக்கிய இராச்சியத்தின் அசிற் ஆர்ஆர் நிறுவனத்தால் ஒருங்கிணைக்கப்படுவதுடன் சத்திர சிகிச்சைகளுக்கான கண்வில்லைகளும், சத்திரசிகிச்சை நுகர்வு பொருள்களும் மற்றும் மருந்துப்பொருள்களும் மலேசியாவைச் சேர்ந்த அலாக்கா மற்றும் ஆனந்தா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் நாளை (சனிக்கிழமை) காலை 9 மணி தொடக்கம் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று உடுவில் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இலவச மருத்துவ முகாம் நாளை (சனிக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத் தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவுசெய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச்செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காலக்கெடு எப்போது?

தமிழ் மக்கள் 35 வருடங்களுக்கு முன்னரே நிராகரித்த அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நாடகம் இன்னும் தொடர்கின்றது. இது தொடர்பில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டம் கடந்த தடவை எந்த முடிவுகளையும் எடுக்காமலேயே முடிந்தது. இப்போது ஆவணி 15 மீண்டும் ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கூட்டத்தின் பின்பே இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒரு ஏமாற்று நாடகம் என்று எதிர்க் கட்சிகள் கருத்துத் தெரிவித்திருந்தன. தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதற்கு ஆதரவாகக் கருத்துரைத்த எதிர்க்கட்சிகள் மாகாண சபைத் தேர்தல் உடன் நடத்தப்படவேண்டும் என்றும் அங்கு வலியுறுத்தியிருந்தன. அதே விடயத்தை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனும் வலியுறுத்தியபோது அவருக்கும் அரசுத் தலைவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளைத் தொடர்ந்து பேச்சை இடையில் முறித்துக் கொண்டு அரசுத் தலைவர் எழுந்து சென்றுவிட்டார். இதனால் அந்தக் கூட்டதில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே ஆவணி 15 மீண்டும் அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்களை நீக்கவேண்டும் என்பதற்கான தனிநபர் சட்ட வரைவு ஒன்றை பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்பன்பில நாடாளுமன்றத்தில் கையளித்துள்ளார். இந்த வரைவு விவாதத்திற்கு எடுக்கப்படுமா, வர்த்மானியில் அறிவிக்கப்பட்டபடி அப்படியே கிடப்பில் கிடக்குமா என்பதெல்லாம் இன்னும் சரியாகத் தெரியவராத நிலை இருப்பினும் தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்குவதை எதிர்ப்பதில் சிங்களக் கடும்போக்குவாதிகள் எப்போதும் தீவிரத்துடன் இயங்குகின்றனர் என்பதை இது காட்டுகின்றது.

சிங்களச் சக்திகளின் இந்த நிலைப்பாட்டையும் அதற்கு அடிபணிந்து வளைந்து கொடுக்கும் அரசுத் தலைவரின் செயற்பாட்டையும் மீண்டும் மீண்டும் கண்டித்து வரும் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன், அரசுத் தலைவருடனான ஒவ்வொரு சந்திப்பிலும் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றார். அது, தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு ஒன்றை வழங்கவில்லையாயின் அவர்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரும் உரித்துரைடயவர்கள், என்பதால் அதைக் கோரவேண்டி ஏற்படும் என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார்.

இருந்தாலும் அதனை எப்போது செய்யப்போகிறார் என்பதை அவர் இதுவரை தெளிவுபடுத்தியதில்லை. அதற்கொரு காலக்கெடு ஏதாவது இருக்கின்றதா என்பதையும் அவர் தெளிவுபடுத்தியதில்லை. சிங்கள, பௌத்த பெரும்பான்மைவாத அரசியலால் கட்டுண்டு கிடைக்கும் தலைவர்கள் மத்தியில் சம்பந்தரின் இத்தகைய சூளுரைகள் ஏதாவது சலனத்தை ஏற்படுத்துகின்றன என்பது தெராியவில்லை. 13ஐ நாடைமுறப்படுத்தும் ரணிலின் நாடகம் மாதிரியே வெளியசுயநிர்ணயஉரிமையைக்கோரும்சம்பந்தரின் கருத்தும் இப்படியே காலவரையறை இன்றி நீண்டு செல்லுமா அல்லது இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்துடன் முடிவுக்கு வருமா என்பதைக் காணத் தமிழ் மக்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

# மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைகிறார் மயோன் முஸ்தபா

முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளார் எனத் தெரிய வருகிறது.

கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார மற்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் ஊடாக கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை மயோன் முஸ்தபா சாதகமாக பரிசீலித்திருப்பதாக அறிய முடிகிறது.

இதையடுத்து, சில தினங்களுக்கு முன்னர் ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் செயலாளர் பாலித ரங்கே பண்டார தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் கலந்துகொண்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு பூராகவும் கட்சி புணரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், கல்முனை தொகுதியிலும் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தலைமைத்துவம் வழங்க முன்வருமாறு மயோன் முஸ்தபாவிடம் இதன்போது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் பங்குபற்றுதலுடன் கல்முனையில் இடம்பெறவுள்ள கட்சியின் புனரமைப்பு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி கட்சியின் கல்முனைத் தொகுதி செயற்பாட்டாளர்களுடன் சிறிகொத்தாவில் இடம்பெற்ற சந்திப்பிலும் பாலித ரங்கே பண்டார பிரஸ்தாபித்துள்ளார்.

இந்நிலையில், கல்முனையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் மயோன் முஸ்தபாவும் கலந்து கொண்டு, கட்சிப் பணிகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்று கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனைத் தொகுதி மத்திய குழு புரைமைப்புக் கூட்டமும்



கட்சி செயற்பாட்டாளர்கள் சந்திப்பும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கல்முனை அல்பஹ்ரியா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

### கிளிநொச்சி புதிய பஸ் நிலைய

# மலசலகூட கழிவு நீரினால் பயணிகள் அசௌகரியம்









கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய பஸ் நிலையத்தின் மலசலகூடத்தின் கழிவு நீர் பயணிகள் பயன்படுத்தும் வெளிஇடங்களில் வெளியேறி நிற்பதால் பயணிகள் கடும் அசௌகரியங்களைச் சந்தித்துவருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பஸ் நிலையம் கடந்த 28.03.2023 அன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் திறந்து வைக் கப்பட்டது. மலசல கூடம், குளியலறை என பல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்ட மத்திய பஸ் நிலையம் ஐந்து மாதங்களில் முகம் சுழிக்குமளவுக்கு மாறிவிட்டது என பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். சில பயணிகளின் பொறுப்பற்ற பயன்பாடு மற்றும் முறையான பராமரிப்பு இல்லாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலசல கூடத்தின் கழிவு நீர் பயணிகளின் பாதைகளிலும் அவர்கள் பயன்படுத்தும் இடங்களிலும் வெளியேறி காணப்படுவதாலும், மலசல கூடங்கள் முறையான பராமரிப்பு இன்மையாலும் அவை சுகாதாரமற்ற முறையில் காணப்படுகின்றன என பயணிகள் தெரிவிக்கின்றனர். (05)

# ஐக்கிய தேசிய கட்சி பதவிகளில் அமர்த்தப்படவுள்ள மனு, ஹரீன்

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டம் புதன்கிழமை நடைபெற்றபோது மனு நாணயக்கார மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோரை மீண்டும் கட்சிப் பதவிகளில் அமர்த்துவதற்கு தீர்மானித்ததாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரின் உறுப்புரிமையும் இதுவரை தடை செய்யப்பட்டிருந்தன எனவும் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான புறக்கோட்டை, சிறிகொத்தாவில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய தேசிய கட்சியின் 77 ஆவது கட்சி மாநாட்டை நடத்துவது மற்றும் கட்சியின் அரசமைப்பை மாற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி கட்சி மாநாட்டை ஜனாதிபதியின் தலைமையில் நடத்த தீர்மானிக்கப்பட்டதாகவும் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (05)

## இந்தோனேஷியாவில் படுகொலை செய்யப்பட்ட கோடீஸ்வரின் சடலம் 8 மாதத்தின் பின் நாட்டுக்கு

இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் உள்ள சொகுசு ஹோட்டல் ஒன்றில் கொலை செய்யப்பட்ட இலங்கையின் கோடீஸ்வர வர்த்தகரான ஒனேஷ் சுபசிங்கவின் சடலம் படுகொலை செய்யப்பட்டு எட்டு மாதங்களுக்குப் பின்னர் செவ்வாய்க்கிழமை இரவு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட கோடீஸ்வர வர்த்தகரின் சடலம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனை நேற்று (வியாழக்கிழமை) இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கோடீஸ்வர வர்த்தகரின் மரணம் தொடர்பில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு 7, விஜேராம மாவத்தையில் வசிக்கும் கோடீஸ்வர வர்த்தகரின் சகோதரியான அனோஷி சுபசிங்க இந்தக் கொலை தொடர்பில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## 82 வயதான பாட்டி பாலியல் துஷ்பிரயோகம்: 57 வயது மருமகன் கம்பளையில் கைதாளார்

82 வயதான தனது பாட்டியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் 57 வயது மருமகனை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை பதில் நீதிவான் காந்திலதா உத்தரவிட்டுள்ளார்.

கம்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருந்துவத்த வாகெதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட குருந்துவத்தை பொலிஸார், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணின் மகள் சந்தேக நபரின் இளைய சகோதரனை திருமணம் செய்துள்ளதாக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வயோதிபப் பெண் திருமணமான தனது மகளுடன் வசிப்பதாகவும், யாரும் இல்லாத நேரத்தில் சந்தேக நபர் வீட்டுக்குச் சென்று துஷ்பிரயோகம் செய்ததாகவும், இதுபற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றும் கூறியதாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir






# ஒழுக்கம்



'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது ஆன்றோர் வாக்கு. கல்வி, பதவி, செல்வம் எல்லா உயற்சிகளும் ஒழுக்கத்திற்கு ஈடாக முடியாது. பணம் படைத்த செல்வந்தர் பலர் ஒழுக்கம் இல்லாததால் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு நிம்மதி இழந்து வாடுகின்றனர். ஒருவரது உயர்ச்சிக்கு காரணமாய் விளங்குவதே சிறந்த ஒழுக்கமே ஆகும். ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் வாழ்வில் எல்லாவற்றையும் வெற்றி கொள்ளலாம். ஒழுக்கம் என்பது ஒரு செயலால் குறிக்கப்படும் மனித நடத்தை அல்ல. மாறாக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்ட நற் பண்புகளின் சேர்க்கையாகும். ஒழுக்கத்தை மாணவர்கள் மத்தியில் வளர்த்துக்கொள்ள அவர்களது பெற்றோர், ஆசிரியர்களின் பங்கு சமூகத்திற்கு முக்கியம். மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்காக சிறந்த பொழுது போக்கு இனிமையான சங்கீதம், விளையாட்டுக்கள் போன்றவற்றில் ஈடுபடச்செய்தல் வேண்டும். ஒழுக்கம் ஒருவனது வாழ்வின் வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்கிறது. ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் சமூகத்தில் ஒரு நல்ல பெயரை உருவாக்கலாம்.

மனிதனை வளர்ப்பது ஒழுக்கம், மனிதனை உயர்த்துவது ஒழுக்கம். ஒழுக்கம் என்ற சொல் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகின்றது.. ஒழுக்கம் வேறு, தீய பழக்கம் வேறு.. கள் உண்ணல் முதலிய தீய பழக்கம், ஒழுக்கக்கேடு. ஒழுக்கம் - ஒழுகல், ஒருவருடன் மோதாமல், அவரின் வாழ்வில் தலையிடாமல் இருப்பதே நல்லொழுக்கம் ஆகும்.

**'உலகம் என்பது ஒழுக்கம்;**
**சுய ஒழுக்கம் தீய ஒழுக்கம்: சுயநலம் அற்றதே நல்லொழுக்கம்'**

என்கிறார் விபுலானந்தர். ஒழுக்கம் பொதுச்சுய நலம் எமது நாட்டின் 'குடிமைப் பயிற்சி' மலிந்து வருகிறது. குடிமைப்பண்பு என்றால் என்ன? ஒரு நாடு ஒன்று கூடி வாழ்வதே குடிமைப்பண்பு. சாதி, மதம், மொழி, இனச்சண்டைகள் போடுதல் தீய ஒழுக்கமாகும். எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஒரு குலம் என்று வாழ்வதே நல்லொழுக்கம். நாம் சமூகம் மதித்துப் போற்றும் வகையில் வாழ வேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரினும் உயர்வாக மதித்துப் பேண வேண்டும். ஒழுக்கம் தானாக வருவதில்லை. நாம் தான் ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் கட்டாயமானது. ஒழுங்காக பாடசாலைக்குச் செல்லல், பாடங்களை கவனமாகப்படித்தல், ஆசிரியர்களுக்கு கீழ்படிதல், ஆசிரியர்கள் தரும் வேலைகளை ஒழுங்காகச் செய்தல் போன்ற விடயங்களும் ஒழுக்கத்தினுள் அடங்கும். மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்கம் பேணப்படவேண்டும். மனிதன் மனிதனாக இருப்பதே தலைசிறந்த ஒழுக்கம்.

**'ஒழுக்கம் விழுப்பம் தரலான்'**
**'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'**

என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை, அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்விற்கு சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமே ஆகும் என்றால் அது மிகையல்ல. இதனாலேயே வள்ளுவர் ஒல்காப் புகழ் மிகு தொல்காப்பியரும் 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்கிறார். ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகிறது. இதனை நன்கு எம் உள்ளத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். பல்வேறு திறமைகளைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

ஒழுக்கம் போற்றும் வகையில் நாம் வாழ வேண்டும். மற்றவர்கள் பார்த்துப் பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக்கூடாது. இறந்தும் வாழ வேண்டும் என்பது நம் இலட்சியமாக அமைய வேண்டும். இறந்தும் வாழ வேண்டுமாயின் வாழும் போதே மேன்மையான வாழ்வை வாழவேண்டும். இந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாக வரும். இதனையே வள்ளுவர் 'ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை எனக் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவர் கூறியபடி ஒழுக்கத்ததை கடைப்பிடிக்க வேண்டும். ஒமுக்கத்தை கடைப்பிடிப்பதால் எமது வாழ்வில் நன்மைகள் பல சேரும். ஒழுக்கம் இன்றி வாழ்வதால் பல தீமைகள் வந்து சேரும் என்று வள்ளுவர் உணர்த்துகிறார். ஒழுக்கத்தை கட்டாயம் கடைப்பிடித்து வாழ்வில் முன்னேற முயற்சிப்போம்

பொருளீட்டுவது எமது நோக்கமாயினும் இதன் மூலம் புகழீட்டுவதே எமது குறிக்கோளாக இருக்க வேண்டும். பொருள் வழியே புகழ்வரவேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரைப்போல உயர்வாக மதித்துப் பேண வேண்டும். இதனையே வள்ளுவர் ஒழுக்கம் ஒல்கா உரவோர் என்கிறார். ஒழுக்கம் நிச்சயம் உயர்வழிக்கும். நீ எதை மதிக்கிறாயோ அது உன்னை மதிக்கும் என்பது முதுமொழி. 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம் இடும்பை தரும்' என வள்ளுவர் கூறுகிறார். தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே தரும். ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவர் தலையில் இழந்த மயிரனை ஆகிடுவர் என ஒழுக்கத்தைப் பேணிக் காக்கவேண்டும்.

ஒழுக்கத்தால் சிறந்து விளங்குவோர் பலர். புத்தர், யேசு, காந்தி போன்றவர்களின் வரலாறுகளைப் புரட்டிப் பார்ப்போமாயின் அவர்கள் ஒழுக்கத்தால் உயர்ந்து நிற்பதைக் காணலாம். நீங்கள் கீதைச் சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மட்டும், நான் மகிழ்ந்து விடமாட்டேன். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் போன்றவற்றைப் பயின்றாலும், பயிலாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கம் பயிலவேண்டுமென மாணவர்களுக்கு உபதேசித்தார் காந்தி அடிகள். அவர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக பேணிக்காத்ததன் மூலம் இன்று உலகத்தோரால் மகாத்மா எனப் போற்றப்படுகின்றார். ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து விளங்கும் உத்த மர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பார்ப் போமாயின் அவர்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

சுருங்கக் கூறின் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் எமது வாழ்வு வளம்பெறும் என்பதில் ஐயமில்லை. ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்.

**செ.ஜெபிசா**
**யா/சென் சாள்ஸ் மகா வித்தியாலயம்**

# அறிவே ஆற்றல் தரும்



'அறிவு வளர் அகிலம் ஆழ்' என்பது மூத்தோர் பொன்மொழி. பகுத்தறிவு என்ற ஒரு திறன் மனிதனிடத்தில் இருப்பதனால் தான் மனிதர்கள் ஏனைய பிற உயிர்களிடமிருந்து வேறுபடுகின்றனர். ஒரு மனிதனிடத்தில் உள்ள நல்லறிவையும் பண்பையும் கொண்டுதான் அவர்களை இந்த உலகம் அறிகிறது. தெளிந்த அறிவும் துல்லியமான சிந்தனையும் உடையவர்கள் பெரும் ஆற்றல் உடையவர்களாக கொள்ளப்படுவார்கள்.

நல்லறிவு உடையவர்கள் நயன்மிகு மரம் பழுத்ததை போல எல்லோர்க்கும் பயனுடையவர்களாக இருப்பார்கள். அறிவுடையவர்களின் ஆற்றல் பிறருக்கும் பலன் தரவல்லது.

அறிவு என்ற சொல் பிரித்தறிகின்ற திறன் தெளிந்த விவேகத்தின் வெளிப்பாடாக அறியப்படுகிறது. இதனை வள்ளுவர் 'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்று விளக்கி நிற்கிறார். அதாவது இந்த உலகத்தில் பலவிதமான கருத்துகள் பலர் வாயிலாக கிடைக்கப்பெற்றாலும் அவற்றில் மெய் என்பது எது என்பதனை தெளிவாக புரிந்து கொள்வதே அறிவு என்று குறிப்பிடுகிறார்.

நூல்கள் பல கற்றவராயினும் அவர் பகுத்தறிவு அற்றவராயின் அவர் அறிவுடையவராக கொள்ளப்படமாட்டார். கல்வி அறிவு, அனுபவம் மூலமாக வருகின்ற அறிவு இரண்டும் உடைய நல்லெண்ணங்கள் உடையவர்கள் சிறந்த அறிவாற்றல் உடையவர்களாக கொள்ளப்படுவார்கள்.

அறிவு என்பது எல்லா மனிதர்க்கும் அவசியமாகும் அறிவில்லாதவர்கள் துன்பம் நிறைந்த வாழ்வே வாழ்வார்கள் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக திருக்குறளில் பின்வருமாறு காணலாம் 'அறிவிலார் தாந்தம்மை பீழிக்கும் பீழை செறுவார்க்கும் செய்தல் அரிது' என்று விளக்குகிறார். அதாவது அறிவு அற்றவர்கள் தமக்கு தாமே செய்து கொள்ளும் துன்பமானது. அவர்கள் எதிரிக்கு கூட செய்யமாட்டார்கள் என்று கூறுகிறார்.

அறிவுடைமை என்பதன் பயன் அது தனக்கு மாத்திரம் பயன்படுவதாக இருக்க கூடாது தன்னை சார்ந்த சுற்றோருக்கும் மற்றோருக்கும் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும். இல்லா விடின் அது அறிவு என கொள்ளப்படமாட்டாது என்கிறார் திருவள்ளுவர். இதனை அவர் 'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தம்நோய்போல் போற்றாக் கடை' என்று வலியுறுத்தி நிற்கின்றார். தன்னை போல மற்றவர்களையும் பாவிக்கின்றவர்கள் உலகத்தில் மிகச்சிறந்த அறிவுடையவர்களாக இருக்கமுடியும்.



அறிவுடையவர்களிடத்தில் இயல்பாக நல்லவிடயங்களை சிந்திக்கவும் அவற்றை அடுத்தவர்க்கும் எடுத்துசொல்லும் குணம் இருக்கும் இயல்பாகவே அன்பும் அவர்களிடத்தில் குடியிருக்கும்.

அறிவுடைமை என்பது மனிதனுக்கு மிகப்பெரிய அரணாகும். இது எந்த சூழ்நிலையிலும் அவனை பாதுகாக்கும்.

திருவள்ளுவர் இதனை விபரிக்கையில் 'அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்க லாகா அரண்' என்று குறிப்பிடுகிறார்.

நிச்சயமற்ற இந்த உலகவாழ்வில் இறுதிக்காலம் வரையும் காப்பாற்றும் கருவி அறிவு தான் இதனை பகைவராலும் அழிக்கமுடியாது. இந்த அறிவு மனிதர்க்கு அழிவு வராமல் காக்கும் என்கிறார் டாக்டர் மு. வரதராசனார். ஆகவே மனிதர்க்கு அறவுடைமை மிகப்பெரிய ஆற்றலாகும். இதனை சரியாக பயன்படுத்தி கொள்ளுதல் நன்மை பயக்கும்.

இந்த உலகத்தில் மனிதர்களாக பிறந்தவர்கள் அனைவரும் பிறப்பினால் சமனாவர் இருப்பினும் அவர்களிடம் இருக்கின்ற பணம், புகழ், செல்வங்கள், ஆடம்பரங்கள், சொத்துக்கள் இவை எல்லாம் தற்காலிகமாக மகிழ்ச்சியையும் பெருமையையும் கொடுக்கலாம். ஆதலால் மனிதர்கள் இவற்றை அடைவதற்கே அதிகம் முனைந்து நிற்கலாம்.

ஆனால் அறிவு இவை அனைத்திற்கும் மேலானது இது எந்த காலத்திற் குகும் அழியாத பெருமை உடையது. என்றைக்கும் நம்மை காப்பது அறிவினால் உண்டாகும் ஆற்றல் என்றால் யாராலும் மறுக்கமுடியாது.

**தெய்வேந்திரம் வஜிதா**




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# எதற்கு முன்னுரிமை?



என்.சத்தியமூர்த்தி

## அக்கரை / அக்கறை அலசல்

இனப்பிரச்சினைக்கு ஏற்ற தீர்வு கிடைக்கவில்லை என்றால், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இந்தியா வுடன் இணைக்கக் கோரிக்கை விட வேண்டியிருக்கும் என்று, ரெலோ தலைவர் செல்வன் அடைக்கலநாதன் கோரியிருப்பது விதண்டாவாதம். அது மட்டுமல்ல. இந்தியா குறித்து வெறும் வாயையே மெல்லும் தென்னிலங்கைத் தரப் பினருக்கு ஒரு பிடி அவலையும் அத்துடன் சர்க்கரையும்கூட கொடுத்ததற்கு சமம்.

இப்போதே. இரு நாடுகளுக்கு இடையே பாக் நீரிணையின் மேல் பாலம் அமைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்து ஆய்வு செய்யப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவின் அண்மைகால இந்திய பயணத்தின் போது எடுக்கப்பட்ட முடிவு தென்னிலங்கையில் தவறுதலாகப் பரப்புரை செய்யப்படுகிறது. அது, வடக்கு– கிழக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இலங்கையையும் இந்தியாவின் ஒரு மாநிலமாக மாற்றும் முயற்சியே, என்று ஒரு தென்னிலங்கை பிரகஸ்பதி தெரிவித்துள்ளார்.

கண்டி, பேராதனை பல்கலை கழக விரிவு ரையாளரான ஆனந்த ஜயவிக்கிரம, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் அமைப்பின் தலைவர். எனவே, அவரது கருத்து குறித்த கட்சி தலைமையின் நிலைபாடு அறியப்படவேண்டும்.

இதற்கிடையில் பதிமூன்றாவது திருத்தம் குறித்து பேசிய மொட்டு கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களுக்கு தலைமைத்துவம் நல்கும் டல்லஸ் அழகபெருமா ஒரு கருத்து சொல்லியிருக்கிறார். கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்றின் படி, “பதிமூன்றாவது திருத்தம் எப்போதோ செயல்ப டுத்தப்பட்டுவிட்டது. இப்போது, ஜனாதிபதி எதற்காக அது குறித்து விவாதிக்கவேண்டும்?” என்ற டலஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த செய்தி உண்மையானால், அவருக்கு சென்ற வருடம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தேர்வில் வாக்களித்த தமிழ் கட்சிகள் தங்களது மனச்சாட்சியிடம் கேள்வி எழுப்பவேண்டும். அதே மூச்சில், அவர்கள் ஏன் 2010 தேர்தலில் சரத் பொன்சேகாவையும் 2015இல் மைத்திரிபால சிறிசேனாவையும் ஆதரித்தார்கள் என் றும் விளக்கவேண்டும்.

### மரியாதைக் குறைவு

இதில் முக்கியமான மற்றொரு விடயம், பதிமூன்று குறித்தோ, தமிழர் தரப்பில் சில கட்சியினர் முன்வைக்கும் சமஷ்டி தீர்வு குறித்தோ, கருத்து எதுவும் சொல்லாமல், ஐக்கிய மக்கள் சக்தி தலைமை நழுவுதியதுதான். ஜனாதிபதியின் பேச்சில் பங்கெடுத்த கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் சரி, கட்சியின் நாடாளுமன்ற கொறடா லக் ஷ்மன் கிரியெல்லவும் சரி, இருவருமே, மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று கூறியதோடு, தங்களது பங்களிப்பை முடித்துக்கொண்டார்கள்.

தமிழர் தரப்பினரில் சுமந்திரனும் மாகாண சபை தேர்தல் குறித்து மட்டுமே பேசியதால், பதிமூன்றோ அல்லது அதிகார பகிர்வோ குறித்து யாரும் கவலைப்படவில்லை. கூட்டம் முடிந்த பின்னரும்கூட, சுமந்திரனின் முன்னெடுப்புகள் தவறானது என்று பேச்சில் பங்கெடுத்த எந்தவொரு தமிழ் தலைவரும் கூறவில்லை.

அதே சமயம், சுமந்திரனை ஜனாதிபதி சாடியது குறித்தும் அவர்கள் யாரும் கவலை தெரிவிக்கவில்லை. ஏன், ரணிலின் இந்திய பயணத்திற்கு முன்பு அவர் கூட்டிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி சம்மந்தனை மட்டம் தட்டி, வேண்டுமென்றால் வெளியே செல்லலாம் என்று கடின வார்த்தைகளை பிரயோகிகத்ததைக்கூட சுமந்திரன் உள்ளிட்ட தமிழ் தலைவர்கள் யாரும் அப்போதும் சரி, கூட்ட முடிவிற்கு பின்னரும் சரி, எதிர்க்கவில்லை. இதில், நீதியரசர் விக்னேஸ்வரனும் அடக்கம்.

சம்மந்தனை பொறுத்தவரையில், இந்த அளவிற்கு அவரை தரம் தாழ்த்தி எந்தவொரு முன்னிலை தலைவரும் பேசியதாகத் தெரியவில்லை. அதிலும் குறிப்பாக, எந்தவொரு ஜனாதிபதியும் இவ்வாறு மரியாதைக் குறைவாக நடத்தியதில்லை. அவருடைய கருத்துக்கு மறு கருத்துக்கள் இருக்கலாம். ஏன், அவரது அரசியலையும் தலைமைத்துவத்தையும் ஏற்றுக்கொள்ளாதவர்களும் இருக்கலாம்.

ஆனால், அவர்கள்கூட சம்மந்தனின் வயது மூப்பு மற்றும் அனுபவம், நினைவாற்றல் மற்றும் பேச்சு திறனுக்கு மரியாதை கொடுத்து வந்திருக்கிறார்கள். அண்மை காலம் வரை, ரணிலே, தானும் சம்மந்தனும் நாடாளுமன்ற அனுபவத்தில் சம காலத்தவர்கள் என்று மூச்சுக்கு முன்னூறு தடவை சொல்லி வந்தவர்தான்.

### ரணிலின் கணக்கு

தற்போதுரணில்இவ்வாறெல்லாம் சொல்வது, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த அவரது ஏமாற்றத்தையும் ஆதங்கத்தையும் குறிக்கிறதா? அல்லது, சம்மந்தன் இப்போது ஒரு கிழ புலி, அதன் பல்லும் நகமும் கூர் இழந்துவிட்டன. அது போன்றே, அதன் ஓடும் திறனும் குறைந்து விட்டது. சுமந்திரனோ, சம்மந்தனின் நிழல் மட்டும்தான். நிஜமல்ல. எனவே, அவர்களை சீண்டினால், எந்தவொரு தமிழ் கட்சியும் அவர்களுக்காக குரல் கொடுக்காது, என்பது போன்ற கணக்கீட்டின் அடிப்டையில் தான் ரணில் இவ்வாறு, சம்மந்தன்–சுமந்திரன் இரட்டையரை சீண்டி பார்க்கிறாரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

இன்னும் சொல்லப்போனால், அவர்கள் இருவரையும் ஒதுக்கிவிட்டு, விக்னேஸ்வரனுடன் தமிழ் அரசியல் பேசலாம் என்றுகூட ரணில் நினைத்திருப்பாரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

காரணம், முன்னெப்போதும் இல்லாத விதத்தில், ஜனாதிபதி, விக்னேஸ்வரனுடன் தொலைபேசி அழைப்பு எடுத்து பேசுகிறார். தனியாக நேரம் ஒதுக்கி பேச்சு நடத்துகிறார், அல்லது தொடருகிறார். அத்தோடு, பதிமூன்று செயல்படுத்துவது குறித்த கிழக்கு மாகாண அரசியல் தலைவரும் ஒருமித்த வடகிழக்கு மாகாணத்தின் தலைமை செயலாளருமான காசிலிங்கம் விக்னேஸ்வரனின் திட்டம் குறித்து விவாதிக்கிறார்.

### அதிபுத்திசாலி, அதிமேதாவி

தென்னிலங்கை தலைவர்களில் ரணில், மிகவும் ஆழமானவர் என்பது அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உண்மை. அது போன்றே அதிபுத்திசாலியும்கூட. அத்துடன் அதிமேதாவி என்று தன்னை நினைத்துக்கொண்டு, அவர் முன்னெடுத்த பல்வேறு அரசியல் முயற்சிகள் அவருடைய சரிவிற்கே வித்திட்டது.

என்றாலும், ரணில் என்ற தனிமனிதனின் வாழ்வில், அந்த அரசியல் சறுகல்கள்தான் அவரை இன்று ஜனாதிபதியாக்கி இருக்கிறது. அவர் மட்டும், தனது ஐக்கிய தேசிய கட்சியில் அனைத்து தரப்பினரையும் அணைத்துக்கொண்டு சென்றிருந்தால், அந்த கட்சி உடைந்திருக்காது. அதனை தொடர்ந்து ரணிலின் அரசியல் தலைமைத்துவமும் படுகுழியில் விழுந்திருக்காது.

அதே சமயம், ஒன்றிணைந்த கட்சியில், ரணிலை முதலில் பிரதமர் பின்னர் ஜனாதிபதியாக முன்மொழிய ஒரு பிரிவு அனுமதித்திருக்காது. இன்னும் சொல்லப்போனால், அவருக்கு நாடாளுமன்றத்தில் தங்கள் ஆதரவை விட்டால் வழியில்லை என்ற ஒரே காரணத்தினால்தான் ராஜபக்சாக்களின் மொட்டு கட்சி அவரது ஆட்சிக்குத் தொடர்ந்து ஆக்ஸிஜன் அளித்து வருகிறது.

### தர்கநியாயம்

சுமந்திரனுக்கான ரணிலின் கேள்வியில் குறும்பும், கேலியும் ஏன் பேச்சுஷ முன்னமே முடித்துவிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எதிரொலித்தது. என்றாலும், தமிழர் தரப்பு தற்போது தாங்கள் எதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். தங்களுக்கு பதிமூன்று சார்ந்த அரசியல் தீர்வு முக்கியமா, அல்லது மாகாண சபை தேர்தல் பிரதானமா, என்ற கேள்விக்கு விடை அறிந்து கொண்டு அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டும்.

இரண்டுமே முக்கியம், இரண்டுமே ஒரே சமயத்தில் முன்னெடுக்கப் படவேண்டும் என்று கூறுவதில் தர்க்க நியாயம் இருக்கிறது. அதேசமயத்தில், ஜனாதிபதி இவ்வாறு பொதுச் சபையில் கேள்வி எழுப்பிய பிறகு, அவரை இரண்டில் ஒன்றிலாவது “கமிட்” செய்ய வைப்பதே புத்திசாலிதனம்.

இன்னும் சொல்லப்போனால், மாகாண சபை விடயத்தில் உச்ச நீதிமன்ற தீர்ப்பு இருக்கிறது. எனவே, அரசிற்கும் ஜனாதிபதி ரணிலுக் கும் எதிராக நீதிமன்ற அவமதிப்பு தொடரலாம். இதில் ஜனாதிபதியின் மீது வழக்கு தொடரமுடியாது என்பது ஒரு புறமிருக்க அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதியின் செயலாளரை அவ்வாறான வழக்கில் எதிர்தரப்பாக சேர்க்கலாம். ஜனாதிபதி சட்டதரணியான சுமந்திரனுக்கு இது போன்ற விடயங்கள் அத்துப்படி.

அந்த விதத்தில், பதிமூன்றை முழுமையாக செயல்படுத்துவதற்கும் உச்ச நீதிமன்றத்தை நாடலாம். ரணிலுடனான பேச்சுக்குப் பிறகு, தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியது போல், பதிமூன்றாவது திருத்தம் எப்போதோ அரசமைப்பு சட்டத்தின் பகுதியாகி விட்டது. அது குறித்தசட்டபிரச்சினைகளையும் உச்சநீதிமன்றம் பைசல் செய்து கனகாலம் ஆகிவிட்டது. எனவே, பதிமூன்றை செயல்படுத்த தற்போது புதிய சட்டங்கள் தேவை என்று ரணில் கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்ற சுமந்திரனின் வாதம் நியாயமானதே.

என்றாலும், அவர் நாடாளுமன்றத்திலோ, பத்திரிகை அறிக்கை மூலமாகவோ, புதிய சட்டங்கள் என்று ரணில் கூறுவது என்ன, அவற்றின் சாராம்சம் என்ன, என்பன போன்ற விடயங்களில் அரசை “கமிட்” செய்ய வைக்கலாம். இல்லை, அது வெறும் ஏமாற்று வேலை என்றால், அதனையும் அம்பலப்படுத்தலாம்.

இல்லையென்றால், ரணில் கூறும் இந்த விடயங்களை பட்டியலிட்டு உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க கட்டாயபடுத்தும் விதமாக, ஒரு வழக்கினை தொடுக்கலாம். இவ்வாறெல்லாம் செய்வதன் மூலம், அரசியல் தீர்வு வடக்கு–கிழக்கு மாகாணம் மற்றும் நாடாளுமன்ற அரசியலுக்கு அப்பாலும், அரசியல்சட்ட பாதுகாப்பு டனான அடுத்தகட்ட முன்னெடுப்புளை நோக்கி நகரலாம்.

இந்த முயற்சியின் மூலம், அரசியல் தீர்வு விடயத்தில் பிற தென்னிலங்கை கட்சிகளின் நிலையையும் எழுத்து மூலம் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டிய கட்டாயத்தை உருவாக்கலாம். இதுவும் சுமந்திரன் போன்ற மூத்த சட்டதரணிக்கு ஜுஜுபி வேலையே.

### சஜித்தின் திட்டம்

பதிமூன்று மற்றும் சமஷ்டி சார்ந்த அரசியல் தீர்வு வேறு, மாகாண சபை தேர்தல் வேறு என்பதை தமிழ்த் தலைமைகள் உணர்ந்து செயலாற்றவேண்டும். மாகாண சபை தேர்தல் விடயத்தில், தென்னிலங்கையின் அனைத்து எதிர்கட்சிகளும் ஒரே அணியில் இருக்கின்றன. அவர்களுக்கு தமிழர் கட்சிகளின் ஆதரவும் இருந்தால் நலம். இல்லையென்றாலும், சமம். எப்போது, பிற மாகாண சபை தேர்தல் நடைபெறுகிறதோ, அப்போது, வடக்கு, கிழக்கு தேர்தல்களையும் அரசு நடத்தாமல் இருக்கமுடியாது.

அதே சமயம், அரசியல் தீர்வு என்பது தமிழர் தரப்பிற்கு மட்டுமே உரிய பிரச்சினை. இதில், தென்னிலங்கை எதிர் கட்சியினரே பிரிந்து நிறக்கிறார்கள். தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பதாக ஏமாற்றுகிறார்கள். ஜனாதிபதியின் அனைத்து கட்சி கூட்டத்தில் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று உரை நிகழ்த்திய எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா, தற்போது நாடாளுமன்ற தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய நிலையில், அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிட்டால், வெற்றிபெறும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ஆனால், ராஜபக்சே கூட்டணியால் நாடாளுமன்ற தேர்தலில் உடனடியாக வெற்றிபெறமுடியாத சூழ்நிலையே தொடருகிறது. ஜனாதிபதித் தேர்தலில் ஜேவிபி தலைவர் அனுரகுமர திசநாயக்க முன்னணியில் இருப்பதாக சில தனியார் கருத்துகணிப்புகள் தெரிவித்தாலும், அவரது கட்சி கூட்டணியால் நாடாளுமன்ற தேர்தலில் உடனடியாக வெற்றிபெற முடியாது என்பது சஜித்தின் கணக்கு. அதில் தவறும் இல்லை.

ஆனால், தமிழரை பொறுத்தவரை, சஜித்தின் இந்த கணக்கால் எந்த பயனும் இல்லை.

# இரத்மலானையில் விபசார விடுதி முற்றுகை: முகாமையாளர் உட்பட 3 பெண்கள் கைது!

இரத்மலானையில் ஆயுர்வேத நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸ குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, புதன்கிழமை மாலை இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு சந்தேகநபர்களில் விபசார விடுதியின் ஆண் முகாமையாளரும் மூன்று பெண்களும் அடங்குவர்.

வெலிமடையைச்சேர்ந்த 40 வயதுடைய ஆண் ஒருவரும் களுத்துறை மற்றும் பொல்பிட்டிஹிகமவைச் சேர்ந்த 19, 20 மற்றும் 26 வயதுடைய மூன்று பெண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபர்கள் கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (05)

# மோ. சைக்கிள் திருடர்களால் பெண்ணின் சங்கிலி அறுப்பு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, குருமன்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

வவுனியா, குருமன்காடு காளிகோவிலுக்கு அருகில் பெண் ஒருவர் சென்றுள்ளார். இதன்போது பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அந்தப்பெண் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த நபர்களை சிலர் துரத்தி சென்றபோதும் அவர்களை பிடிக்க முயலவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, நேற்று முன்தினம் நெளுக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பெண் ஒருவர் அணிந்திருந்த 5 பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (05)

# ஒரு கடனட்டை அளவு நுண் பிளாஸ்டிக் துகள்கள் வாராந்தம் மனிதன் வயிற்றுக்குள் அடைகின்றன

## ஊட்டச்சத்து நிபுணர் ரொஷான் கருத்து

வாராந்தம் 5 கிலோ கிராம் அதாவது ஒரு கடனட்டை அளவில் நுண் பிளாஸ்டிக் துகள்கள் மனிதனின் வயிற்றுக்குள் செல்கின்றது என ஊட்டச்சத்து நிபுணர் ரொஷான் டெலா பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஊட்டச்சத்து நிபுணர் ரொஷான் டெலா பண்டார இதனைத் தெரிவித்தார்.

உணவு, குடிநீர் மற்றும் நாம் சுவாசிக்கும் காற்றில் மைக்ரோபிளாஸ்டிக் எனும் நுண் நெகிழித் துகள்கள் கலந்திருப்பதாக ஆஸ்திரேலியாவின் நியூகேஸில் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு நபர் வாரத்துக்கு 5 கிராம் நுண் நெகிழித் துகள்களை உட்கொள்கிறார். அதாவது, ஒரு கடனட்டையின் அளவு நுண் நெகிழித் துகள்களை உட்கொள்கிறார்.

அதன்படி, ஒரு மாதத்தில் 20 கிராமும் மற்றும் வருடத்துக்கு 250 கிராமும் நுகரப்படுகிறது என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நம் உடலுக்குள் நுண் நெகிழித் துகள்கள் செல்வதற்கு நைலோன் துணி மற்றும் நைலோன் மீன்பிடி வலைகள் முக்கிய காரணங்களாக அமைவதாக பல ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் செயலாளர் வைத்தியர் சஜித் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெரும்பாலான நுண் நெகிழித் துகள்கள் நாம் சுவாசிக்கும் காற்றின் மூலம் நம் உடலுக்குள் செல்கின்றன. - என்றார். நுண் நெகிழித் துகள்களை அதிகமாக உட்கொண்டால் புற்றுநோய் ஏற்படலாம். எனவே, தாங்களாகவே பிளாஸ்டிக் பொருள்களை அழிக்காமல், மறுசுழற்சி செய்யும் மையங்களில் ஒப்படைக்குமாறும மருத்துவர்கள் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டனர்.

பிளாஸ்டிக் பொருள்களை எரிக்க வேண்டாம் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது. ஏனெனில் அவை அதிக எண்ணிக்கையிலான நச்சு இரசாயனங்கள் மற்றும் வாயுக்களை வெளியிடுகின்றன என மேலும் அவர் தெரிவித்தார். (05)



# யாழ். கிளாலியில் துப்பாக்கி சூடு! ஒருவர் காயம்

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலி கடற்கரையில் சட்டவிரோத மணல் ஏற்றிய நபர்கள் மீது புதன்கிழமை இரவு கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

பளைப் பகுதியைச் சேர்ந்த கஜேந்திரன் பிரணவன் என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# அஜித் ரோஹணவின் மனு மீதான விசாரணை செப்ரெம்பர் 4 இல்

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹனவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நியாயமான காரணமின்றி தனக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை இரத்துச் செய்ய உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நேற்று (வியாழக்கிழமை) மற்றுமொரு வழக்கு விசாரணை நடைபெறவுள்ளதால் இந்த மனு மீதான பரிசீலனை ஒத்திவைக்கப்படுவதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (05)

# கடுவலையில் தாக்குதல் காயங்களுடன் நிர்வாணமாக மீட்கப்பட்ட ஆணின் சடலம்

## 3 பேர் கைது

கடுவலை வெளபாறை பகுதியின் முட்புதரில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் நிர்வாணமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளதாக கடுவலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் 2 ஆம் திகதி புதன்கிழமை மீட்கப்பட்ட நிலையிலேயே சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கடுவலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கவரகல தோட்டத்தில்

# தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிட்ட செந்தில் தொண்டமான்









கவரகல தோட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தால் சேதமடைந்த வீடுகளை இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அவசர தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு முன்னர் வழங்கிய கூரைத்தகடுகளை அம்மக்களுக்கு உடனடியாக வழங்குமாறும், தீயால் சேதமடைந்த வீடுகளின் பழுதுபார்க்கும் வேலைகளை ஒரு வாரத்திற்குள் முடிக்குமாறும் தோட்ட நிர்வாகத்துக்கு அவர் பணிப்புரையும் விடுத்தார். (05)

# பள்ளிவாசல் படுகொலைகள்; காத்தான்குடியில் அடைப்பு

காத்தான்குடி பள்ளிவாயில்களில் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் 33 ஆவது வருட நினைவு தினம் நேற்று (வியாழக்கிழமை) அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை ஒட்டி காத்தான்குடி பிரதேசமெங்கும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அனைத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன.

நகரின் பல இடங்களில் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டு துக்க தினமாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி காத்தான்குடி மீரா ஜும்மா பள்ளிவாயல், காத்தான்குடி ஹுசைனியா பள்ளிவாயல் ஆகிய இரு பள்ளிவாயல்களில் இரவு நேர தொழுகையில் ஈடுபட்டிருந்த 103 முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டு 268 முஸ்லிம்கள் படுகாயப்படுத்தப்பட்ட சம்பவத்தின் 33 ஆவது நினைவருட நினைவு தினம் நேற்று ஆகும்.

இதனை ஒட்டியே நேற்றைய தினத்தை காத்தான்குடி மக்கள் துக்கதினமாகவும் அனுஷ்டித்து வருகின்றனர்.

இது தொடர்பாக காத்தான்குடி ஹுசைன்யா பள்ளிவாயல் மற்றும் மீரா ஜும்மா பள்ளிவாயல் ஆகிய இறுதி பள்ளிவாயல்களிலும் விசேட துவா பிரார்த்தனை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அதே நேரம் காத்தான்குடி ஷுஹதாக்கள் சதுக்கத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் என்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)







# தலைமன்னார் முதல் மாத்தளை வரையான மலையக மக்களின் எழுச்சி பேரணிக்கு செட்டிகுளத்தில் வரவேற்பு





மலையக மக்களின் எழுச்சிப்பயணத்தின் 7 ஆம் நாளான நேற்று (வியாழக்கிழமை) பேரணியினர் மடுவிலிருந்து ஆரம்பித்த நடைபயணத்தை செட்டிக்குளத்தில் நிறைவு செய்தனர்.

இதன்போது செட்டிக்குளம் பகுதியை அடைந்த மலையக மக்களை அப்பகுதி மக்கள் வரவேற்று, அன்பு பாராட்டி, உணவுப் பண்டங்களை வழங்கினர்.

அவ்வேளை மலையக மக்களுக்காக தாம் என்றும் குரல் கொடுப்போம் என்றும், அவர்களது துன்ப, துயரங்களில் தாம் என்றென்றும் உடனிருப்போம் என்றும் கூறி செட்டிக்குளம் மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

'வேர்களை மீட்டு உரிமை வென்றிட' எனும் தொனிப்பொருளில் மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவில் முன்னெடுக்கப்பட்டுவரும் தலைமன்னார் தொடக்கம் மாத்தளை வரையான நடைபவனி நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னாரில் ஆரம்பமான நிலையில் நேற்று 7ஆம் நாளை எட்டியுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் ஓகஸ்ட் 12 ஆம் திகதி இந்தப் பேரணி மாத்தளையை அடைவதோடு இந்த நடைபவனி நிகழ்வுகள் நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# நசீர் அஹமட்டிடம் 25 கோடி ரூபா நட்டஈடு கோரும் கிழக்கு ஆளுநர்



சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமட்டிடம் 25 கோடி ரூபா (250 மில்லியன்) நட்டஈடு கோரி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சட்டத்தரணி ஊடாக நோட்டிஸ் அனுபியுள்ளார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட நசீர் அஹமட், கிழக்கு மாகாண ஆளுநர் தொடர்பில் பொய்யான கருத்துக்களையும் அரச தொழில் இடமாற்றங்கள் குறித்து பிழையான தகவல்களையும் வெளியிட்டு அவற்றை கிழக்கு மாகாண ஆளுநருடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபடுத்தி கருத்து வெளியிட்டிருந் தார்.

இந்த குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சட்டத்தரணி ஊடாக நோட்டிஸில் கோரியுள்ளார்.

அத்துடன் இந்த நோட்டிஸ் கிடைக்கப்பெற்று 14 நாள்களுக்கும் 25 கோடி ரூபா நட்டஈட்டுத் தொகையை கிழக்கு மாகாண பாடசாலை வளர்ச்சிக்கு வழங்குமாறும் இல்லையேல் நசீர் அஹமட் மீது மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நசீர் அஹமட் வழங்கும் நட்டஈட்டுத் தொகை கிழக்கு மாகாணத்தில் உள்ள 10 முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் என தெரிவித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அந்த பாடசாலைகளின் பெயர் பட்டியலையும் இணைத்துள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.08.2023இல் வெளியிடப்பெற்றது.